# டாக்டர் மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி

## பொள்ளாச்சி -642003

## நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம்

## முகாம் அறிக்கை 2019-2020

டாக்டர் மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் மாக்கினாம்பட்டி மற்றும் ஊஞ்சவேலாம்பட்டி பகுதிகளில் 13.02.2020 முதல் 19.02.2020 வரை நடைபெற்றது. முகாமின் நிகழ்வுகள் பின்வருமாறு:

**13.02.2020 வியாழக்கிழமை :**





மதியம் 3:00 மணியளவில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் துவக்க விழா NIA சக்திபுரா திட்ட அலுவலர் திரு S.நாகராஜன் அவர்கள் தலைமையில் ஊஞ்சவேலாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது.வட்டார கல்வி அலுவலர் திரு. R.பிரசாந்த், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு.S.முருகானந்தம், ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி. M.சபரிநித்யா

,நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் N.பங்கஜம், முனைவர் R.மாரியப்பன், முனைவர் R.ரமேஷ் ,NSS மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**14.02.2020 வெள்ளிக்கிழமை :**

**காலை 9:00 மணி :**

அருட்செல்வர் நகரில் தேவையற்ற செடிகள் மற்றும் குப்பைகளை 50 NSS மாணவர்கள் கொண்ட குழு அகற்றியது.





**காலை 10:00 மணி:**

அருட்செல்வர் நகரில் உள்ள மரங்களுக்கு தண்ணீர் ஊற்றப்பட்டது.

**மதியம் 2:00 மணி:**

அருட்செல்வர் நகரில் பூங்கா சுத்தம் செய்யப்பட்டு மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றப்பட்டது .






**மாலை 5:00 மணி:**

அருட்செல்வர் நகரில் சாலையோரத்தில் உள்ள தேவையற்ற செடிகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டு எரி க்கப்பட்டது .

**15.02.2020 சனிக்கிழமை:**

**காலை 9:00 மணி:**

நாட்டு நலப்பணிதிட்ட மாணவர்களை இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பிரிவினர் ஊஞ்சவேலாம்பட்டி பள்ளி வளாகத்தை தூய்மைச்செய்தனர்.

மற்றொரு பிரிவினர், ஊஞ்சவேலாம்பட்டியிலுள்ள வீடுகளுக்கு சென்று உன்னத் பாரத் திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு நடத்தினர். இதன் மூலம் 300 பொதுமக்கள் பயனடைந்தனர்.






**மதியம் 2:30 மணி:**

ஒரு பிரிவினரால் பள்ளியில் உள்ள குப்பைகள் அகற்றப்பட்டது. மற்றொரு பிரிவினரால் மீதம் உள்ள வீடுகளுக்கு கணக்கெடுப்பு நடைப்பெற்றது.





**16.2.2020 ஞாயிற்றுக்கிழமை** :

**காலை 9 மணி :**

மாக்கினாம்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது .





பொள்ளாச்சி சிந்தியா கிளினிக் டாக்டர் வரதராஜன் , பொள்ளாச்சி அரசு மருத்துவமனை டாக்டர் மோகன் மற்றும் MCET கல்லூரியின் டாக்டர் தங்கவேல் அவர்கள் தலைமையிலான மருத்துவக் குழுவினர் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளித்தனர் .

மேலும் மாக்கினாம்பட்டியில் டெங்கு மற்றும் கொரோனா தடுப்பு என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது .





**17.2.2020 திங்கட்கிழமை :**

**காலை 9 மணி :**

ஊஞ்சவேலாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு முதலாம் ஆண்டு துறைத் தலைவர் முனைவர் A. சக்திவேல் அவர்கள் மின்சார சிக்கனம் பற்றிய சிறப்புரை வழங்கினார் . இதன் மூலம் சுமார் 50 மாணவர்கள் பயன் அடைந்தனர் .






**மதியம் 2 மணி:**

ஊஞ்சவேலாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஓட்டப்பந்தயம் , சாக்குப்போட்டி , Lemon and the spoon போட்டிகள் நடைபெற்றது.



மேலும் 6 முதல் 8 வரையுள்ள பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஓவியப்போட்டி ,கட்டுரைப்போட்டி ,பேச்சுப்போட்டி நடைபெற்றது .



**மாலை 4 மணி :**




போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு NIA சக்தி புரா திட்ட அலுவலர் திரு .S.நாகராஜன் ,ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி .சபரிநித்யா ,பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் திரு.S.முருகானந்தம் அவர்கள்  பரிசு வழங்கினர் .

**18.02.2020 செவ்வாய்கிழமை**

**காலை 9 மணி :**

மாக்கினாம்பட்டி அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அறிவியல் பற்றிய செய்முறை விளக்கம் NSS மாணவர்களால் பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது . இதன் மூலம் 50 மாணவர்கள் பயன் அடைந்தனர் .






மேலும் 10 பேர் கொண்ட மாணவர் குழு மாக்கினாம்பட்டியில் உன்னத் பாரத் திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு நடத்தினர். இதன் மூலம் 100 பொதுமக்கள் பயனடைந்தனர்.



மேலும் பள்ளி மாணவர்களுக்கு MCET கல்லூரி யோகா பயிற்சி ஆசிரியை திருமதி. ராஜேஸ்வரி அவர்களால் யோகா பயிற்சி அளிக்கப்பட்டது .

**மதியம் 2 மணி :**

ஊஞ்சவேலாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் திரு பாஸ்கர் , திரு சிவகுருநாதன் மற்றும் திருமதி ஜெயந்தி ஆகியோர் சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வு என்ற தலைப்பில் கருத்துக்களை எடுத்து கூறினர்.நமது NSS மாணவர்கள் மற்றும் பள்ளிமாணவர்கள் பலனடைந்தனர்.





பின்னர் NSS மாணவர்களால் சாலை விதிகள் பற்றிய விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியின் மூலம் சுமார் 100 மாணவர்கள் பயன் அடைந்தனர்.



**19.02.2020 புதன்கிழமை**

**காலை 9 மணி :**

NSS மாணவர்கள் 20 பேர் கொண்ட குழுவால் மாக்கினாம்பட்டி யில் உன்னத் பாரத் திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது . இதன் மூலம் சுமார் 80 பொதுமக்கள் பயன் பெற்றன.



**காலை 11 மணி**

சுகாதாரத்தின் முக்கியத்துவத்தில் ஒன்றான கைகழுவுவதின் பயன்பாட்டை பள்ளி மாணவர்களுக்கு நமது NSS மாணவர்கள் செயல் முறை விளக்கம் செய்து காட்டினர் .


Save
Water !

**மதியம் 3 மணி :**


SAKTHI PURA
(Providing Urban amenities in Rural Areas)
NACHIMUTHU POLYTECHNIC COLLEGE
NATIONAL SERVICE SCHEME


SAKTHI PURA
NATIONAL SERVICE SCHEME




நாட்டு நலப்பணித்திட்டத்தின் நிறைவு விழாவில் நமது கல்லூரியின் முதல்வர் முனைவர் A.ரத்தினவேலு அவர்கள் தலைமை உரை வழங்கி சிறப்பித்தார் . மேலும் NIA சக்திபுரா திட்ட அலுவலர் திரு S.நாகராஜன் அவர்கள், மற்றும் மாக்கினாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் திருமதி உமா ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவு பெற்றது.

Dr. R. Ramesh
NSS Programme Officer

Principal